FWC

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, யூலை - 2019**

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, July - 2019**

| தரம் :- 12 (2020) | நாடகமும் அரங்கியலும் | மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

## பகுதி I

❖ **இப்பகுதியில் உள்ள 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கான மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. 'மாறா உணர்ச்சியை' வெளிப்படுத்தும் கலை வடிவம்.
1) நாடகம் 2) நடனம் 3) சிற்பம் 4) இசை 5) சினிமா ( )

02. பின்வருவனவற்றில் 'மன வெளியில் பரிணமிக்கும்' உருவமற்ற கலை வடிவங்கள்.
1) நடனம், இசை 2) ஓவியம், சிற்பம் 3) நாடகம், இசை
4) சிறுகதை, நாவல் 5) வில்லிசை, வானொலி நாடகம் ( )

03. நாடக ஆற்றுகையில் 'பெண்கள்' ஆற்றுவோராக செயற்பட்ட தொன்மையான நாடகப்பாரம்பரியமுள்ள நாடு
1) கிரேக்கம் 2) இந்தியா 3) சீனா
4) எகிப்து 5) உரோம் ( )

04. 'போலச் செய்தலே நாடகம்' என்ற கருத்தினை முன்வைத்த இருவர்.
1) பரதர், அரிஸ்ரோட்டில் 2) பரதர், அபிநவ குப்தர்
3) அரிஸ்ரோட்டில், பேனாட்ஷோ 4) அரிஸ்ரோட்டில், இளம்பூரணார்
5) இளம் பூரணார், பரதர் ( )

agaram.lk

05. 'வன தேவதைகளின் நாடகம்' என அழைக்கப்பட்டது.
1) ரஜடி 2) கொமடி 3) மனோரதியம்
4) சற்றயர் 5) கொமேடியா டெல் ஆர்த்தோ ( )

06. கிரேக்கத்தின் 'ரஜடியின்' இறுக்கமான கட்டமைப்பை உடைத்தவர் என கூறப்படுபவர்.
1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) மெனான்டர்
4) பிளேட்டஸ் 5) யூரிப்பிடிஸ் ( )

07. அரங்கு என்பதற்கு மிகவும் பொருத்தமுள்ள கூற்று.
1) ஆற்றுகை நிகழுமிடம் 2) ஆற்றுகைக்குரிய செயற்தொகுதி
3) அரங்க கட்டடம் 4) ஆற்றுவோர் பார்ப்போர் இணையும் இடம்
5) பார்த்தலுக்குரிய வெளி ( )

08. கிரேக்க அரங்கமரபில் உளவியல் சார் நாடகங்களைப் படைத்தவர்.
1) ஏஸ்கிலஸ் 2) சோபோகிளிஸ் 3) யூரிப்பிடிஸ்
4) அரிஸ்ரோட்டில் 5) மெனான்டர் ( )

09. அரிஸ்ரோட்டில் குறிப்பிடும் 'அரங்க மும்மை'
1) நேரம், இடம், வெளி 2) காலம், இடம், இயக்கம் 3) காலம், செயல், இயக்கம்
4) நேரம், வெளி, களம் 5) காலம், இயக்கம், நேரம் ( )

10. 'ஸ்பவன வாசவதத்த' என்ற நாடகத்தினை எழுதியவர்
1) காளிதாசர் 2) பாசர் 3) சூத்ரகர்
4) ஸ்ரீஹர்சர் 5) பாடினியர் ( )

11. பரதர் கூறும் 'ஸ்தாயி' பாவங்களின் எண்ணிக்கை.
1) 32 2) 03 3) 18 4) 08 5) 09 ( )

12. ரஸத்திற்கு நிலைக்களமாக அமையும் விடயம்
1) ஸ்தாயி பாவம் 2) அனுபாவம் 3) வியவிச்சாரி பாவம்
4) சஞ்சாரி பாவம் 5) விபாவம் ( )

13. உண்மையான மகிழ்நெறி என்பது ஒரு தேசிய இனத்தின் மடமைகளையும், குறைபாடுகளையும் பேசுகின்ற சித்திரம் எனக் கூறியவர்.
1) வோல்ட்டயர் 2) அரிஸ்ரோட்டில் 3) மோலியர்
4) விற்றூவியஸ் 5) பேனாட்ஷா ( )

14. வடமொழி நாடகத்தில், நாடகத்தின் பெயர், நாடக ஆசிரியர் பெயர், நாடக நோக்கம், பார்ப்போர், ஆற்றுகைக் காலம் போன்ற பல்வேறு விடயங்களையும் அறிமுகம் செய்யும் பகுதி
1) நாந்தி 2) சுதாபன 3) கீதவிதி
4) ரங்கத்வாரம் 5) மார்க்கா ஸாரிதம் ( )

15. நாட்டிய சாஸ்திரம் கூறும் அரங்கில் 'ஆற்றுகை நடைபெறும் களம்'
1) ரங்க சீர்யம் 2) நேபத்யகிரகம் 3) மத்தவாரணி
4) ரங்கபீடம் 5) களரி மையம் ( )

16. ஈழத்தில் 'நாற்சார் வீடு' அரங்காக பயன்படுத்தப்பட்ட நாடகம்.
1) சுந்தரம் எங்கே 2) வாடகைக்கு அறை 3) உடையார் மிடுக்கு
4) தீ சுமந்தோார் 5) எந்தையும் தாயும் ( )

17. 'ஊமம்' நாடக முறைமையின் பிறப்பிடம்
1) கிரேக்கம் 2) இத்தாலி 3) உரோம்
4) யப்பான் 5) பிரான்ஸ் ( )

18. "சமய கரணங்கள் நாடக அம்சங்களை கொண்டுள்ளன. இதில் இருந்து 'மக்கள் அரங்கு' தோன்றி இருக்க வேண்டும்' எனக் கூறியவர்.
1) ஜோர்ஜ் தொம்சன் 2) ஜோண் ஹரீசன் 3) கீத்
4) றிட்ஜ்வே 5) றிச்சாட் சதேன் ( )

19. மத்திய கால ஐரோப்பாவில் நாடகம் தோன்றிய சடங்காக கருதப்படுவது
1) டயோனீசியஸ் சடங்கு 2) கிறிஸ்தவ திருப்பலிச்சடங்கு
3) சம்போஷா சடங்கு 4) களவேள்வி
5) லெனே விழாச்சடங்கு ( )

20. 'சடங்கின் மூலங்களை' தமது நவீன அரங்கச் செயற்பாடுகளில் பயன்படுத்திய இருவர்
1) பிரகட், மேயஹோல்ட் 2) பாதல்சர்க்கார், அரியானி
3) ஷேக்ஸ்பியர், மோலியர் 4) குரொட்டோவ்ஸ்கி, அன்ரோனின் ஆர்த்தோ
5) சாமுவேல் பெக்கட், பீற்ரர்புறூக் ( )

21. சோழர் காலத்தில் 'திருவளவன்' என்ற பெயரில் அழைக்கப்பெற்ற கலைஞன்.
1) எழுத்தாளன் 2) யாழ் இசைப்போன் 3) ஆடல் ஆசான்
4) நெறியாளன் 5) நடிகன் ( )

agaram.lk

22. தொல்காப்பியம் குறிப்பிடுகின்ற 'ஆற்றுகை மையம்'
1) பண்ணை 2) ஆடுகளம் 3) களரி
4) அம்பலம் 5) எருமன்று ( )

23. மட்டக்களப்பு வடமோடிக் கூத்து தொடர்பான பொருத்தமற்ற கூற்று
1) காலமேற்றுதல் காணப்படும்
2) பாத்திர வரவு சபையோரால் பாடப்படும்
3) போர், வீரம், பற்றியதான பாடுபொருள் அமையும்
4) பாரமான வேட உடைகள் காணப்படும்.
5) ஆடல்கள் நுணுக்கமற்றவை. ( )

24. 'புலசந்தோர்' என்னும் பாத்திரத்தின் பணி
1) கதை சொல்லுதல் 2) அரச வரவைக் கூறுதல்
3) நகைச்சுவையை வெளிப்படுத்தல் 4) கூத்தை நடத்தி செல்லல்
5) பிற்பாட்டுபாடுதல் ( )

25. காத்தவராஜன் கூத்து பயிலப்படும் பிரதேசங்கள்
1) மன்னார், மட்டக்களப்பு 2) மட்டக்களப்பு, யாழ்ப்பாணம்
3) முல்லைத்தீவு, மட்டக்களப்பு 4) யாழ்ப்பாணம், முல்லைத்தீவு
5) மலையகம், யாழ்ப்பாணம் ( )

26. எல்லாக் கூத்துமரபிலும் அடிப்படையாக பயன்படுத்தப்படும் இசைக்கருவி
1) மத்தளம் 2) ஹார்மோனியம் 3) உடுக்கு
4) மிருதங்கம் 5) சல்லரி ( )

27. சோபோகிளிசின் 'இடிப்பஸ் மன்னன்' என்ற நாடகத்தின் கதை எங்கிருந்து பெறப்பட்டது.
1) தீபிய புராணம் 2) தொன்மங்கள் 3) இலியட்
4) கவிதை இயல் 5) ஓடிசி ( )

❖ **"இங்கிலிசுப் பண்டிதர் தம் பட்டணத்துப் பள்ளி வரை போக்காட்டிப் பேனை எடுத்துப்பிடித்துப் பெரிதெழுதும் ஆனானப்பட்ட அரிய கிளாக்கராய் ஆக்கினால் அன்றி அடியேன் உயிர் பிரியேன்"**
கோடை நாடகத்தில் வரும் மேற்படி உரையாடலை கொண்டு 28, 29, 30 ஆகிய வினாக்களுக்கு விடை அளிக்குக.

agaram.lk

28. மேற்படி உரையாடலை நிகழ்த்தும் பாத்திரம்
1) மாணிக்கம் 2) முருகேசு 3) செல்லம்
4) கமலி 5) சோமு ( )

29. இவ் உரையாடலில் குறிப்பிடப்படும் பாத்திரம்.
1) கமலி 2) சோமு 3) காசி
4) கணேசு 5) சாமி ( )

30. இவ்வுரையாடல் அமையும், 'உரையாடல் முறை'
1) தன்னுரை 2) தனிமொழி 3) ஆகாய கிளர்த்தல்
4) சாதாரண உரையாடல் 5) புறச்சொல் ( )

31. இடிப்பஸ் மன்னன் நாடகத்தின் அவல நாயகன் செய்த 'அவல வழு' (ஹமாசியா) வாக கொள்ளக்கூடியது.
1) தான் வாழ்ந்த நாட்டில் இருந்து வெளியேறியது.
2) தீர்க்க தரிசனத்தை நம்பியது.
3) தான் தவறற்றவன் என்ற மமதையோடு தேடல் செய்தமை
4) தந்தையை கொன்றமை
5) நாய்முகத்து சூனியக்காரியிடமிருந்து நாட்டினை மீட்டது. ( )

32. பேராசிரியர். சி. மௌனகுரு எழுதிய இராவணேசனின் பாடுபொருள் மாற்றத்துடன் மேடையேற்றப்பட்ட முக்கிய மேடையேற்றங்களின் காலம் முறையே.
1) 1962, 2000, 2015, 2019 2) 1964, 1999, 2005, 2009 3) 1965, 2000, 2014
4) 1963, 2005, 2009, 2014 5) 1964, 2000, 2010, 2014 ( )

33. கோடை நாடகம் முதன் முதலாக மேடையேற்றப்பட்டது.
1) நாடக அரங்க கல்லூரியினால் 2) நடிகர் ஒன்றியத்தினால்
3) நாடோடிகள் குழுவினரால் 4) கூத்தாடிகள் குழுவினரால்
5) திருமறைக்கலாமன்றத்தினால் ( )

34. சர்வதேச அளவில் தற்போது வெளிவந்து கொண்டிருக்கும் தமிழ் அரங்கியல் இதழ்.
1) கூத்தரங்கம் 2) உடல் 3) கட்டியம்
4) ஆற்றுகை 5) நாடக வெளி ( )


35. அண்மையில் மறைந்த உலகப் புகழ்பெற்ற இந்திய நாடக ஆசிரியர்.
1) பேரா.இராமானுஜம் 2) K.A. குணசேகரன் 3) பாதல் சர்க்கார்
4) கிரிஸ்கர்னாட் 5) கிரேஸி மோகன் ( )


36. அருகிலுள்ள படத்தில் காணப்படும் கூத்து மரபு
1) கோவலன் கூத்து 2) காத்தவராஜன் கூத்து
3) வாசாப்பு 4) காமன் கூத்து
5) யாழ்ப்பாண தென்மோடி



( )

37. அருகில் காணப்படும் அரங்க வெளிகள் முறையே
1) கிரேக்க வட்டப்பேரரங்கு, நோ நாடக அரங்கு.
2) உரோமைய அரங்கு, சுவான் அரங்கு
3) குளோப் அரங்கு, உரோமைய அரங்கு
4) குளோப் அரங்கு, கிரேக்க வட்டப்பேரரங்கு
5) சுவான் அரங்கு, உரோமைய அரங்கு






( )

agaram.lk

❖ **இப்படத்தொகுதியை கொண்டு 38, 39, 40 ஆகிய வினாக்களுக்கு விடை அளிக்குக.**



**A B C D E F G**

38. 1960 களில் இராவணேசனின் ஆக்க கர்த்தாக்கள்
1) A, B 2) B, F 3) B, D 4) F, G 5) D. G ( )

39. கோடை நாடக ஆசிரியரும் முதல் நெறியாளரும் முறையே
1) D, C 2) B, G , 3) C, F 4) B, C 5) D, G ( )

40. சடங்கு மூலகங்களில் இருந்து தமது நவீன நாடக முறைமையை வடிவமைத்தவர்கள்
1) A, B 2) A, E 3) E, B 4) G, C 5) A, C ( )

(1X 40 = 40 புள்ளிகள்)

## பகுதி II

❖ **பகுதி 'A' இல் இருந்து இரண்டு வினாக்களையும் பிரிவு 'B' இல் இருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தம் 4 வினாக்களுக்கு விடை தருக?**

### பிரிவு A

**(எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை தருக)**

01.

1) 'கலை' 'கைவினை' ஆகிய எண்ணக்கருக்களை ஒப்பிடுக? (5 புள்ளிகள்)
2) மேலைத்தேய, கீழைத்தேய கலைக்கோட்பாடுகளுக்கிடையே காணப்படும் அடிப்படை வேறுபாடுகளை விபரிக்குக? (5 புள்ளிகள்)
3) சமூக தொடர்பாடலில் ஆற்றுகைக்கலைகளின் தொடர்பாடல் வன்மையை விபரிக்குக. (5 புள்ளிகள்)

02.

1) 'கதாசிஸ்' என்பதனை விளக்குக? (3 புள்ளிகள்)
2) சோபோகிளிசின் 'இடிப்பஸ் மன்னன்' நாடகத்தில் 'கதாசிஸ்' வெளிப்படும் முறையை இனங்காண்க? (6 புள்ளிகள்)
3) அரிஸ்ரோட்டில் கூறும் 'நாடக மும்மை' இடிப்பஸ் மன்னன் நாடகத்தில், இடம்பெறும் முறைமையை ஆராய்க? (6 புள்ளிகள்)

03.

1) சடங்கில் இருந்து நாடகம் தோன்றியது என்ற தோற்றக்கொள்கை தொடர்பான, இரண்டு ஆய்வாளரின் கருதுகோள்களைத் தருக? (4 புள்ளிகள்)
2) ஈழத்தில் காணப்படுகின்ற சடங்குடன் இணைந்த நாடக மரபுகள் இரண்டினை விபரிக்குக. (5 புள்ளிகள்)
3) சடங்கை நோக்கிய நவீன நாடகப் போக்குகளை உதாரணங்களுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

agaram.lk

### பிரிவு B

04. ஏகாதிபத்திய ஆட்சி, பாரம்பரிய சமூகத்தின் பல்வேறு வாழ்வு நிலைகளிலும் தாக்கம் செலுத்தியது, என்ற கருத்தினை மஹாகவியின் கோடை' நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க?

(15 புள்ளிகள்)

05. 'அரசியல், சமூக வளர்ச்சி நிலைகள் அரங்கில் செல்வாக்குச் செலுத்தும்' என்பார்கள், தமிழ் நாட்டின் அரங்க வரலாற்றுப் பின்புலத்தில் மேற்குறிப்பிட்ட கருத்து நிலையை விபரிக்குக.
(15 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் மூன்று வடிவங்களின் ஆற்றுகை முறை பற்றி சிறு குறிப்பு எழுதுக.
1) மட்டக்களப்பு வடமோடிக்கூத்து
2) யாழ்ப்பாண தென்மோடிக்கூத்து
3) காத்தவராஜன் கூத்து
4) கோவலன் கூத்து
5) இசை நாடகம்

(5x3=15 புள்ளிகள்)